பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 23 | ஞாயிற்றுக்கிழமை | 10.09.2023 | அதிர்வு 40

**'சனல் 4' குற்றச்சாட்டுக்களை**


## முற்றாக மறுக்கிறது பாதுகாப்பு அமைச்சு

– சுடர் திலீபன் –

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக "சனல் 4" தொலைக்காட்சி வெளியிட்டுள்ள குற்றச்சாட்டுக்களைப் பாதுகாப்பு அமைச்சு 03▶

**ஈஸ்டர் தாக்குதலுக்கு மட்டும் சர்வதேச விசாரணையைக் கோரி**

# சஜித், கர்தினால் கேவல அரசியல்




## செல்வம் எம்.பி. சாட்டை

- கே. வசந்தரூபன் -

"தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை செய்யப் பட வேண்டும் என ஐ.நா. கூட வலியுறுத் திய போதும் குரல் கொடுக்காத எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண் டகை மற்றும் ஏனையவர்கள் உயிர்த்த ஞாயிறு தினச் சம்பவத்தை வைத்துக் கொண்டு அரசியல் நடத்துவது உண்மை யிலே கேவலமான விடயம்."

- இவ்வாறு தமிழ் ஈழ விடுதலை இயக் கத்தில் (ரெலோ) தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித் தார். 06▶

# உங்கள் கைகளில் இரத்தக்கறை இல்லையெனில் உண்மையை வெளிப்படுத்தப் பயப்பட வேண்டாம்

## அரச தரப்பிடம் சஜித் சுட்டிக்காட்டு

– சுடர் திலீபன் –

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்த உண்மை தொடர்பில் நாட்டின் பெரும்பான்மையான மக்களுக்குச் சந்தேகம் எழுந்துள்ளது. பாரபட்ச மின்றி நடுநிலையான விசார ணையின் மூலம் பேராயர் கர்தி னால் தலைமையிலான கத்தோலிக் கச் சமூகத்துக்கும், அனைத்து இலங் கையர்களுக்கும் உண்மையை அரச தரப்பு வெளிப்படுத்த வேண்டும். உங் கள் கைகளில் 03▶



# தையிட்டி விகாரைக் காணியை கையகப்படுத்துவதற்குத் திட்டம்



## தடுத்து நிறுத்த அணிதிரளுமாறு மக்களுக்கு முன்னணி அழைப்பு

– எஸ்.நிதர்ஷன் –

"யாழ்ப்பாணம், பலாலி – தையிட்டியில் பொதுமக் களின் காணியில் சட்டவிரோ தமாகப் பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இந் நிலையில், அந்த விகாரைக் காணியைச் சுவீகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது. 03▶

# பாதுகாப்பு அமைச்சின் அறிக்கைக்கு எதிராகப் பேராயர் இல்லம் கண்டனம்

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாகச் "சனல் 4" வீடியோ ஊடாகக் சுமத் தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை முழுமையாக நிராகரிப்பதாகப் பாது காப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக் கையை கொழும்பு பேராயர் இல்லம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இந்த வெளிப்படுத்தல் தொடர்பில் உரிய முறையில் விசாரணை நடத் தாமல் அதனை உடனடியாக நிராகரிப் பது பொருத்தமற்ற செயற்பாடு என்று கொழும்பு பேராயர் இல்லத்தின் செய்தி தொடர்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிஷ ாந்த பெர்னாண்டோ தெரிவித்துள் ளார். (விரிவான செய்தி 8ஆம் பக் கத்தில்...)

## இரகசியம்



"கோழி வந்ததால் முட்டை வந்ததா? அல்லது முட்டை வந்ததால் கோழி வந்ததா?"

– இப்படி ஒரு கேள்வியை வழமையான பாணிக்குச் சற்று மாற்றிக் கேட்டார் நண்பர் ஒருவர்.

ஏன் இந்தக் கேள்வி என்று அந்தத் தமிழரசு 03▶

# சனல் -4 வீடியோ குறித்து



# சர்வதேச விசாரணைக்கு மைத்திரியும் கோரிக்கை

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் – 4 தொலைக் காட்சி வெளியிட்டுள்ள வீடியோ தொடர் பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்."

– இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலை வரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன.

இது தொடர்பில் அவர் கூறுகையில், "சனல் 4 ஊடாக வெளியிடப்பட்டுள்ள தகவல்களை நூறு வீதம் ஏற்கவும் முடி யாது. அதேபோல் நிராகரித்து விடவும் முடியாது. எனவே சனல் 4வில் கூறப் பட்டுள்ள விடயங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். ஏனெ னில் இங்கு விசாரணையை ஒப்படைத்து சரிவராது. இங்கு இதுவரை முன்னெடுக்கப் பட்டுள்ள விசாரணைகளில் திருப்தியும் இல்லை.

சனல் – 4 வீடியோ குறித்து விசாரணை அவசியம் என ஐ.நா. வலியுறுத்தியுள்ளது. ஐ.நாவின் கோரிக்கையின் பிரகாரம் சர்வதேச விசாரணை நடத்துவதே சிறந் தது." – என்றார்.

# இலண்டனிலிருந்து வந்த தமிழ் யுவதி மர்ம மரணம்

## மாடியில் இருந்து பாய்ந்தாரா? சட்டக் கல்லூரி மாணவன் கைது



கொழும்பு – கல்கிஸையில் உயிரி ழந்த தமிழ் யுவதி தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

பேஸ்புக் மூலம் ஏற்பட்ட நட்பால் இலங்கை இளைஞரின் அழைப்பின் பேரில் இங்கிலாந்திலிருந்து இலங்கை வந்த தமிழ் யுவதியே உயிரிழந்துள்ளார்.

யுவதியும் இளைஞரும் கல்கிஸை – அல்விஸ் பிளேஸில் உள்ள ப்ளூ ஓஷன் தொடர் மாடியில் தங்கியிருந்த நிலை யில் நேற்று அதிகாலை 2 மணியளவில் குறித்த யுவதி 13ஆவது மாடியில் இருந்து கீழே விழுந்துள்ளார் என்று கல்கிஸைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

27 வயதுடைய சின்னையா அழ கேஸ்வரன் ரொமினா என்ற இளம் யுவதியே உயிரிழந்துள்ளார்.

இந்த யுவதி இன்று மீண்டும் இங்கி லாந்து செல்லவிருந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் உயிரிழந்த வருடன் பேஸ்புக் ஊடாக உறவைப் பேணிய இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் சட்டக் கல்லூரி மாணவன் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ள னர்.

கல்கிஸை பதில் நீதிவான் திருமதி ரத்னா கமகே விசாரணைகளை மேற் கொண்டார். மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (முதல் கிடைத்த செய்தி 17ஆம் பக்கத்தில்)

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நண்பரை நோண்டினேன். அவரின் பதில் எனக்குத் தூக்கி வாரி போட்டது.

"இல்லை தமிழரசுக்குள் ஒரு சர்ச்சை. இந்த மாதிரி ஏற்பட்டுள்ளது. அதுதான் கேட்டேன்" – என்றார் அந்த நண்பர்.

என்ன, ஏது என்று விசாரித்து மூக்கை நுழைத்தேன்.

வழமையான 'பிள்ளையார் கல்யா ணம்' போன்ற பிரச்சினைதான். நான் 'பிள்ளையார் கல்யாணம்' என்றதுமே என் வாசகர்கள் கப்பென விடயத்தைப் பிடித்துக் கொள்வார்கள். பிந்திப் பத்துவ தற்கு அவர்கள் ஒன்றும் 'டியூப் லைட்' அல்லரே...!

ஆம். வாசகர்களாகிய நீங்கள் நினைத் தது சரிதான். 'பிள்ளையார் கல்யாணம் போல' நாளைக்கு, நாளைக்கு என்று இழுபடும் தமிழர்சுக் கட்சியின் தேசிய மாநாடு விவகாரம்தான்.

இந்த மாத முற்பகுதியில் வவுனியா வில் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் என்றார்கள். அதில் தேசிய மாநாட்டுக் கான திகதி நிர்ணயிக்கப்படும் என்றார்கள். மத்திய குழுவும் கூடவில்லை. தேசிய மாநாடும் நடப்பதாக இல்லை. மத்திய குழு இனி அடுத்த மாதத்தில்தான். அதன் பின்புதான் தேசிய மாநாட்டுக்கு திகதி நிர்ணயிக்கப்படும். அதுவரை – தேசிய மாநாடு வரை – கட்சித் தலைவர் மாவை யின் பதவி நிலை நீடிக்கும். அவர் அஞ்சத் தேவை இல்லை.

நேற்று முன்தினம் நல்லூர் திரு விழா. மாலை உற்சவம் முடிந்து பக்தர்கள் வெளியேறிக் கொண்டிருந்தனர். கிழக்கு மாகாணத் தமிழரசுப் பிரமுகரும், வடக்கு மாகாணத் தலைவர் ஒருவரும் கோயில் முன்றிலில் எதிரும் புதிருமாகச் சந் தித்துக் கொண்டார்கள்.

"போற போக்கில அடுத்த வருடம்தான் கட்சியின் தேசிய மாநாடு நடக்கும் போல...!" – என்றார் கிழக்கு மாகாணப் பிரமுகர்.

"ஆமாம். அப்படித்தான் தோன்றுகின் றது" – என்று நமது வடக்குத் தலைவர் பிரதிபலிப்புக் காட்டினார் என்று அருகில் இருவரின் உரையாடலையும் அவதானித் துக் கொண்டிருந்த நண்பர் ஒருவர் பின் னர் என் காதுகளில் கிசு கிசுத்தார். கூடவே ஒன்றும் சொன்னார்.

"போற போக்கில் பார்த்தால் தமிழரசு கட்சியின் மாநாடு இப்போதைக்கு நடக் காது. தற்காலிகப் பொதுச் செயலாளரோடு கட்சியைத் தானே வாழ்நாள் முழுவதும் கட்டியிழுப்பது எண்டு தலைவர் ஒரேடியாக முடிவு கட்டிப்போட்டார் போல!" – என்று அவர் 'கொமெண்ட்' அடித்தார்.

இனி, என் பழைய நண்பரின் முட்டை – கோழிக் கதைக்கு வருகிறேன்.

தமிழரசுக் கட்சியின் மூலக் கிளைகள், தொகுதிக் கிளைகள், மாவட்ட கிளைகள் தங்கள் கிளைக் கூட்டங்களை நடத்தி பிரதிநிதிகளைத் தேர்வு செய்யாததுதான் மாநாட்டை நடத்த முடியாமலிருக்கின் றமைக்குக் காரணம், அதனால்தான் ஆகக்கூடியது இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையாவது நடத்த வேண்டிய கட்சி யின் மாநாடு நான்கு வருடங்களாகியும் நடக்கவில்லை, ஒரே தலைவரே ஒன்பது ஆண்டுகளுக்கு மேல் பதவியில் நீடிக் கிறார் என்று கட்சி நிர்வாக மட்டத்தில் சமாதானம் கூறப்படுகின்றது.

கடந்த ஆறு மாதங்களாகக் கிளை களை உசுப்பி விட்டுக் கூட்டங்கள் நடக் கின்றன.

ஒரு கிளை – மாவட்ட மட்டக் கிளையா கக் கருதப்படுவது – ஏழெட்டு வருடங் களாகக் கூட்டங்களை வைக்க வேண்டி யது வைக்கவில்லையாம். கடந்த ஒகஸ்ட் 31ஆம் திகதிக்கு முன் கூட்டம் நடத்தப் படாவிட்டால் கிளை செயலிழந்ததாக கருதி, கட்சியே ஆரம்பத்தில் இருந்து புதிதாக அந்த கிளையைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கும் என்று கிளையின் நிர்வாகிகளாக இருப்போருக்கு கட்சி யின் தேசியமட்ட நிர்வாகத்தில் இருந்து எச்சரிக்கைக் கடிதம் அனுப்பப்பட்டும் கிளையில் ஏதும் அசைவில்லையாம்.

கிளையின் நிர்வாக மட்டத்தில் இருக்கும் ஒருவர் என் நண்பருடன் பேசி இருக்கிறார்.

"அதுதான் கட்சியின் தேசிய மாநாட் டையே நான்கு வருடங்களாகக் கூட்டாமல் அவர்கள் பதவியில் நீடிக்கின்றார்கள். நாங்கள் கூட்டம் கூட்டவில்லை என்று எங்கள் கிளையைச் செயலிழந்ததாக அறிவிப்பதானால், முதலில் கட்சியையே செயலிழந்ததாக அறிவிக்க வேண்டும். கட்சியின் தேசியக் கூட்டத்தையே கூட்டாத வர்கள், மாவட்ட அந்தஸ்துடைய கிளை யைக் கூட்டவில்லை என்று எப்படிக் கேட்பது? அதற்கு அவர்களுக்கு அரு கதை உண்டா? எங்கள் கிளையைச் செயலிழந்ததாக அவர்கள் அறிவிக்கட் டும். பிறகு பார்க்கலாம்!" – என்று அந்தப் பிரமுகர் எனது நண்பர்களிடம் கறுவி இருக்கிறார்.

அதையொட்டித்தான் எனது நண்பர் என்னிடம் கேள்வி எழுப்பினார்.

"இவர்கள் மூலக் கிளை, தொகுதிக் கிளை, மாவட்டக் கிளை கூட்டங்களைக் கூட்டவில்லை என்பதற்காக அவர்கள் – கட்சியின் பிரதான நிர்வாகிகள் – கட்சியின் தேசிய மாநாட்டைக் கூட்டவில்லையா? அல்லது அவர்கள் தேசிய மாநாட்டைக் கூட்டுவதில் சிரத்தை காட்டாதபடியால் மாவட்டக் கிளைகள், தொகுதிக் கிளைகள், மூலக் கிளைகள் தமது கூட்டங்களைக் கூட்டவில்லையா? விளங்கவில்லை. அதுதான் கோழி வந்ததால் முட்டை வந்ததா? அல்லது முட்டை வந்ததால் கோழி வந்ததா? – என்று கேட்டேன்" – என்றார் என் நண்பர்.

இதுதான் இலங்கைத் தமிழரசுக் கட் சியின் இப்போதைய சீத்துவ நிலைமை. அரசியல் சுயநலம் கடந்த தலைமைத் துவம் இல்லாதமைதான் இந்த நிலை மைகளுக்கெல்லாம் காரணம் என்பது என் கணிப்பு. கட்சிக்காரர்களும் வாசகர்க ளும் அதை ஏற்பார்களோ தெரிய வில்லை.

## முற்றாக மறுக்கிறது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

முற்றாக மறுத்துள்ளது.

அவை பொய்யான குற்றச்சாட்டுகள் எனப் பாதுகாப்பு அமைச்சு உத்தியோக பூர்வமாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"உலகையே உலுக்கிய கொடூரமான, இரக்கமற்ற தாக்குதலுக்கு முகங்கொடுத்து - 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் - குழந்தைகள் மற்றும் வெளிநாட்டவர்கள் உட்பட கிட்டத்தட்ட 270 அப்பாவி உயிர்கள் கொல்லப்பட்டதுடன், இலங்கை மற்றும் சர்வதேச சமூகம் அச்சத்துடன் பார்த்துக் கொண்டிருந்தது.

இந்தப் பேரழிவை அடுத்து, இலங்கை அரசு, அதன் சட்ட அமுலாக்கப் பிரிவினர், பாதுகாப்புப் படைகள் மற்றும் சர்வதேச புலனாய்வு அமைப்புகள் விரிவான விசாரணைகளை ஆரம்பித்தன. பல ஆண்டுகளாக, உள்ளூர் மற்றும் சர்வதேச விசாரணைகள், சஹ்றான் ஹாஷிம் தலைமையிலான ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்த குழு உறுப்பினர்களே இந்தப் பயங்கர அனர்த்தத்தின் காரண கர்த்தாக்கள் என்பதைத் தொடர்ந்து சுட்டிக்காட்டியுள்ளன.

எவ்வாறாயினும், 2023ஆம் ஆண்டு செப்டெம்பர் 5ஆம் திகதி பிரித்தானியாவின் "சனல் 4" தொலைக்காட்சி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட சமீபத்திய ஆவணப்படத்துக்கு உறுதியுடனும், அர்ப்பணிப்புடனும் பதிலளிக்கப் பாதுகாப்பு அமைச்சு விரும்புகின்றது. இந்த ஆவணப்படம் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கான பழியை இராணுவப் புலனாய்வு பிரிவு மற்றும் இலங்கையின் தேசிய புலனாய்வு சேவையின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே மீதும் அப்பட்டமாக மாற்ற முயற்சிக்கின்றது.

தாக்குதலைத் திட்டமிட்டு, குண்டுதாரிகளுக்கு உதவியதாக 36 ஆண்டுகளாகத் தேசத்துக்குச் சேவையாற்றிய அர்ப்பணிப்புள்ள சிரேஷ்ட இராணுவ அதிகாரிக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டைப் பாதுகாப்பு அமைச்சு வன்மையாகக் கண்டிக்கின்றது. மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே மலேசியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் 2016 டிசம்பர் முதல் 2018 டிசம்பர் வரை பணியாற்றினார். அவர் 2019 ஜனவரி 3ஆம் திகதி இந்தியாவுக்குச் சென்று டில்லியில் தேசிய பாதுகாப்புக் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு 2019 நவம்பர் 30ஆம் திகதி இலங்கைக்குத் திரும்பினார். "சனல் 4" வீடியோ ஆவணப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் இந்த அதிகாரி இலங்கையில் இருக்கவில்லை.

மேலும், கூறப்பட்ட காலப்பகுதியில் (டிசம்பர் 2016 முதல் நவம்பர் 2019 வரை), இந்த அதிகாரி நாட்டின் உளவுத் துறை மற்றும் பாதுகாப்புத் துறையில் பணியமர்த்தப்படவில்லை அல்லது அந்தத் துறைகளில் அவர் எந்த உத்தியோகபூர்வ பொறுப்புக்களையும் வகிக்கவில்லை. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் தொடர்புடைய பயங்கரவாதிகள் எவரும் எந்தச் சந்தப்பத்திலும் அரசின் சம்பளப் பட்டியலில் இருந்ததில்லை என்பதைப் பாதுகாப்பு அமைச்சு மீண்டும் வலியுறுத்துகின்றது. எனவே, பாதுகாப்பு அமைச்சு இந்தக் குற்றச்சாட்டுக்களைத் திட்டவட்டமாக மறுப்பதுடன், இத்தகைய தீங்கிழைக்கும் மற்றும் ஆதாரமற்ற விடயமொன்றை வெளியிட்டதற்காக சனல் 4 மீது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை அடுத்து, இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசுகள் உண்மையை வெளிக்கொணர்வதில் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளன. உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களால் நடத்தப்பட்ட வெளிப்படையான வசதியளித்து விசாரணைகளை எளிதாக்குவதன் மூலம் அவை அவ்வாறு செய்யப்பட்டன. குற்றப் புலனாய்வுத் திணைக்களம், பயங்கரவாத எதிர்ப்புப் புலனாய்வுப் பிரிவு மற்றும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஆகியவற்றின் விசாரணைகள், தாக்குதலுக்கான தீவிரவாதக் குழுவின் பொறுப்பைத் தொடர்ந்து உறுதிப்படுத்தியுள்ளன. மேலும் தேசிய பாதுகாப்புக்கான துறைசார் மேற்பார்வைக் குழு தேசிய பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்மொழிவதில் முக்கிய பங்காற்றியுள்ளது.

மேலும், ஆஸ்திரேலிய ஃபெடரல் பொலிஸ் மற்றும் அமெரிக்காவில் உள்ள ஃபெடரல் பீரோ ஆஃப் இன்வெஸ்டிகேஷன் ஆகியவற்றால் நடத்தப்பட்ட விரிவான விசாரணையும், அமெரிக்க நீதித்துறையின் தீர்ப்புக்களும் உள்ளூர் விசாரணைகளின் கண்டுபிடிப்புக்களை உறுதிப்படுத்தியுள்ளன என்பதை அடிக்கோடிட்டுக் காட்டப்பட வேண்டியது அவசியமாகும். சர்வதேச புலனாய்வு அமைப்பின் இந்த உறுதியான ஒப்புதல் விசாரணைகளின் துல்லியம் மற்றும் நேர்மையை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

தொடர்ச்சியான மற்றும் உண்மையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், சனல் 4இன் தூரநோக்கற்ற மற்றும் மோசமான நடத்தையானது முரண்பாடுகளை விதைப்பதன் மூலம் இலங்கை சமூகத்தின் கட்டமைப்பை சீர்குலைப்பது மட்டுமல்லாமல், அவர்களின் நேர்மையையும் பொறுப்பையும் உறுதியுடன் நிலைநிறுத்தியவர்களின் நற்பெயரையும் பாதுகாப்பையும் பாதிக்கின்றது.

பாதுகாப்பு அமைச்சு கருத்துச் சுதந்திரத்துக்கு மதிப்பளித்து, புலனாய்வு பத்திரிக்கை துறையின் முக்கியத்துவத்தை பறைசாற்றும் அதேவேளை, அவர்களின் ஆதாரமற்ற, தீங்கிழைக்கும் மற்றும் மோசமான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளால் ஏற்படும் எதிர்பாராத செயல்கள் அல்லது விளைவுகளுக்கு "சனல் 4" பொறுப்பேற்க வேண்டும் என்று நாங்கள் உறுதியாக வலியுறுத்துகின்றோம்.

இலங்கை அரசின் சார்பாக, பாதுகாப்பு அமைச்சு இந்த பொய்யான குற்றச்சாட்டுக்களைத் திட்டவட்டமாக நிராகரிப்பதோடு, உண்மை, நீதி மற்றும் தேசத்தின் நல்வாழ்வுக்கான அரசின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்துகின்றது." - என்றுள்ளது.

## உங்கள் கைகளில்...

இரத்தக்கறை இல்லை என்றால், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான உண்மையை வெளிப்படுத்தப் பயப்பட வேண்டாம்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மாத்தறையில்நேற்றுநடைபெற்றநிகழ்வொன்றுக்குப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளாக இருப்பவர்கள் யார்? இதைத் திட்டமிட்டது யார்? இதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார்? இது தீவிரவாத திட்டமா? இதில் அரசியல் நோக்கங்கள் இருந்ததா? என்பவை தொடர்பில் விசாரிக்கப்பட வேண்டும். உண்மையை வெளிப்படுத்துவதில் தயங்கக்கூடாது.

நியாயமான விசாரணை கோரப்படும்போது அலற வேண்டிய அவசியமில்லை. அரச தரப்பு நபர்கள் இவ்வாறு கூச்சல் போடுவதால் இதில் மறைப்பதற்கு ஏதோ இருக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. கைகள் சுத்தமாக இருந்தால், அந்தக் கைகளில் இரத்தக்கறை படியவில்லை என்றால், அரசியல் பேரங்களுக்காகப் பயங்கரவாதிகளுடன் ஒப்பந்தம் செய்யவில்லை என்றால், உண்மையைத் தேட அச்சப்பட வேண்டாம்." - என்றார்.

## தையிட்டி விகாரைக்..

இதனைத் தடுத்து நிறுத்தி எமது மண்ணைப் பாதுகாக்க அனைவரும் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை அங்கு அணிதிரள வேண்டும்."

- இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ்,

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

"தையிட்டி பிரதேசத்தில் அமைந்திருக்கின்ற சட்டவிரோத விகாரைக் காணியை ஆக்கிரமிப்பதற்கு நில அளவைத் திணைக்களமும் அரச அதிகாரிகளும் வருகை தரவுள்ளனர் என்று நம்பத் தகுந்த தகவல் எங்களுக்குக் கிடைத்திருக்கின்றது.

இந்த அளவீட்டு பணிகள் இடம்பெறுமாக இருந்தால் நிரந்தரமாகவே அந்தக் காணிகள் சுவீகரிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டு விடும்.

ஆகவே சட்டவிரோத விகாரைக் கட்டுமானத்தை எதிர்த்தும் நில அளவைப் பணிகளை எதிர்த்தும் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை தமிழ் மக்கள் அனைவரும் அங்கே திரண்டு தமது எதிர்ப்பைப் பலமாகக் காட்டி அளவீட்டுப் பணிகளை தடுக்க வேண்டிய காலத்தின் கட்டாயம் எழுந்திருக்கின்றது.

எனவே, தமிழ் மக்கள் அனைவரும் எமது கோரிக்கையை ஏற்று செவ்வாய்க்கிழமை காலையில் அந்த இடத்துக்கு அணிதிரள வேண்டும். எமது மண்ணைப் பாதுகாக்க அனைவரும் அணிதிரள வேண்டுமென அன்புரிமையோடு கேட்டு நிற்கின்றோம்." - என்றார்.

# நல்லூரான் கைலாயவாகனத்தில் வீதியுலா



நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவில் 20ஆம்நாள் மாலை உற்சவம் நேற்று இடம்பெற்றது. வள்ளி,தெய்வானை சமேதராக முருகப் பெருமான் கைலாயவாகனத்தில் வீதியுலா வந்தார்.

படங்கள் - பிரபாகரன் டிலக்சன்













# வடக்கில் தொல்பொருள் திணைக்களத்தில் பெரும்பான்மையினருக்கே அதிக நியமனம்

## அதீத ஆதிக்கம் என மக்கள் குற்றச்சாட்டு

வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் பணியாற்றுவதற்காக அதிகளவில் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டு வருவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஒரு இலட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதிலும் குறிப்பாக தொல்பொருள் திணைக்களத்தின் யாழ்ப்பாண பிராந்திய அலுவகத்தின் கீழ் பணியாற்ற 30 வரையான பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் தொல்பொருள் மையங்களில் தங்க தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும் குற்றச்சாட்டப்படஉள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள இளைஞர்கள், யுவதிகள், பட்டதாரிகள் வேலை வாய்ப்பு இல்லாது இருக்கும் போது இவ்வாறான வேலைவாய்ப்புக்கள் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை என வடக்கு கிழக்கு எங்கும் தொல்லியல் திணைக்களத்தின் ஆக்கிரமிப்புகள் தொடர்பாக மக்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

பாரிய சந்தேகங்கள் எழுந்துள்ள நிலையில் இவ்வாறு வடபகுதியை சேர்ந்தவர்கள் புறக்கணிக்கப்பட்டு பெரும்பான்மை இனத்தவர் நியமிக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படும் விடயம் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

# வறட்சியான வானிலையால் சிறுபோகத்தில் 63 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் அழிவு





வறட்சியான வானிலையால் சிறுபோகத்தில் 63 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான விளைநிலங்கள் அழிவடைந்துள்ளன என விவசாய காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான அறிக்கை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் விவசாய அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது என சபையின் தலைவர் எம்.பி. வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

வறட்சியான வானிலையினால் நெற்பயிர் விளைநிலங்களே அதிக அளவு பாதிப்பை எதிர்கொண்டுள்ளன.

பெரிய வெங்காயம், மிளகாய், சோயா உள்ளிட்ட ஏனைய போகப் பயிர்கள் பயிரிடப்பட்டிருந்த 460 ஏக்கருக்கும் அதிகமான விளைநிலங்களும் அழிவடைந்துள்ளன என விவசாய காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், வறட்சியான வானிலையினால் 64 ஆயிரத்து 342 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# நுவரெலியா விபத்தில் இருவர் படுகாயம்!



நுவரெலியாவில் பஸ்ஸ/ம், மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நுவரெலியா – பதுளை பிரதான வீதியில், நுவரெலியா மாநகர சபை மைதானத்திற்கு முன்பாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரே படுகாயமடைந்த நிலையில் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வெலிமடையிலிருந்து நுவரெலியாவை நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸ/டன், நுவரெலியாவில் இருந்து பொரகஸ் பிரதேசத்தை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை, நுவரெலியா போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## வெளிப்படும் உண்மைகள்

'யுத்தங்களின் போதும், கிளர்ச்சிகளின் போதும் முதலில் பலியாவது உண்மை' என்பார்கள். உண்மையை கொன்று, பொய்மையின் மீதுதான் பெரும்பாலும் யுத்த வெற்றிகள் கட்டமைக்கப்படுகின்றன.

இதனை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரை யாற்றும்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தமது பேச்சினிடைய சுட்டிக்காட்டினார்.

அதாவது, உண்மையைக் கொன்று, பொய்மையை விதைத்து, அதன் பெறுபேறாகவே யுத்த வெற்றிகள் விளைச்சலாகப் பெறப்படுகின்றன. அல்லது ஈட்டப்படுகின்றன.

பிரபலமான பிரெஞ்சு நாவலாசிரியர் எமில் ஸோலா தனது கடைசி நாவலுக்கு 'வெரைட்டே' என்று பெயரிட்டார். பிரெஞ்சில் அந்தச் சொல்லின் அர்த்தம் 'உண்மைத் தன்மை' அல்லது 'உண்மையை கண்டறிதல்' ஆகும். உண்மை பற்றிய அவரது கூற்று ஒன்று கவனிக்கத்தக்கது.

'உண்மை மறைக்கப்பட்டு, புதைக்கப்படுமானால், அது மண்ணுக்குள் வீரியமாக வளர்கின்றது. வீறுகொண்டு எழுந்து பெருக்கிறது. வெடிகுண்டு போல ஒரு நாள் அது வெடித்து வெளிப்படும் போது எதிர்ப்படும் எல்லாமுமே சிதற வேண்டிய நேரும்' - என்ற சாரப்பட அவர் குறிப்பிடுகின்றார்.

அதுதான் இப்போது 'சனல்-4' காணொலி மூலமும் நிகழ்ந்திருக்கின்றது.

கருத்துத் திணிப்பு மூலம் மக்களைக் கட்டிப்போட்டு, அவர்களைத் தவறாக வழி நடத்தி, அதிகார வர்க்கம் தனது அதிகாரப்பிடியை வலுவாக்கிக் கொண்டது.

இப்போது அந்தக் கருத்துத் திணிப்புக்கு எதிராக திமிறி எழுந்து, அது கட்டிப்போட்ட தடைகளைப் பிய்த்து உதறி, உண்மை வெளிப்படத் தொடங்கியிருக்கின்றது.

தென்னிலங்கை ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டமை, பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை ஆகியவை மூலம் உண்மைகளை வெளிப்பட விடாமல் மூடி மறைத்துப் புதைப்பதில் வெற்றிகண்ட அதிகார வர்க்கம், அதன் மீது தான் தனது ஆட்சிப் பிடியை - அதிகார வலுவை - உறுதிப்படுத்திக் கொண்டது.

மறைக்கப்பட்ட உண்மை இப்பொழுது பருத்துப் பூதாகரமாக வெடித்துக் கிளம்பி உள்ளது. அந்த வெடிப்புக்கான திரியாக ஆஸாத் மௌலானா அமைந்திருக்கின்றார். அவ்வளவுதான்.

சரி, லசந்த விக்ரமதுங்க, பிரதீப் எக்னெலிகொட போன்றோரை அழிப்பதன் மூலம் உண்மைகளை மறைத்து விடலாம் என்ற தைரியம் அந்த அதிகார மையங்களுக்கு எங்ஙனம் கிட்டியது?

தமிழ் மக்களையும், தமிழ் ஊடகவியலாளர்களையும் கொன்றழித்துவிட்டு, அந்த உண்மைகளை எல்லாம் 'பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டம்' என்ற பெயரில் இலகுவாகப் புதைப்பதற்கு பௌத்த,சிங்கள பேரினவாதத்தின் மகாவம்ச மனவமைப்பில் அமிழ்ந்து கிடக்கும் தென்னிலங்கைச் சிங்களவர்களின் சிந்தனை உலகு சாதகமான தரையாகக் கிட்டியது. அதில்தான் இந்த உண்மைகளை எல்லாம் இலகுவாக புதைத்தார்கள்.

அந்த உண்மைகள் எல்லாம் எமில் ஸோலா குறிப்பிட்டமை போல இப்போது விஸ்வரூபம் எடுத்து, வெடித்து வெளிப்படத் தொடங்கி இருக்கின்றன. அவ்வளவுதான்.

## சஜித், கர்தினால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வவுனியாவில் அமைந்துள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக "சனல் 4" வெளியிட்ட தகவலானது பரபரப்பாகப் பேசப்பட்டு வருகின்ற நிலை காணப்படுகின்றது. இன்று தென்னிலங்கையில் உள்ளவர்களும், கர்தினால் கூட இந்த உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றனர்.

நாங்களும் இது தொடர்பாக சர்வதேச விசாரணை மற்றும் சர்வதேச நீதிமன்றத்துக்கு இதனைக் கொண்டு செல்ல வேண்டும் என்று சொல்வதுடன், விரைவாக இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றோம்.

ஆனால், இந்த விடயம் ஜனாதிபதித் தேர்தலை முன்னிறுத்தியே தற்போது பேசுபொருளாக இருப்பதாகவே நான் கருதுகின்றேன். ஏனெனில் கடந்த காலத்தில் எங்களுடைய மக்கள் மீதான மனித உரிமை மீறல் சம்பந்தமாக – ராஜபக்ஷ குடும்பம் படுகொலை செய்ததன் அடிப்படையில் ஐ.நா. சபை கூட கண்டனம் தெரிவித்து, இதனை முழு ஒத்துழைப்போடு விசாரணை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இலங்கை அரசிடம் முன் வைத்தது. நாங்களும் இந்த விடயத்தில் சர்வதேச விசாரணை செய்யப்பட வேண்டும் அல்லது சர்வதேச நீதித்துறையைச் சார்ந்தவர்கள், சர்வதேச வழக்கறிஞர்களை அழைத்து விசாரணை செய்ய வேண்டும் என வலியுறுத்தியிருந்தோம். ஆனால், அந்தச் சந்தர்ப்பத்தில் குரல் கொடுக்காத எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் ஏனையவர்கள் உயிர்த்த ஞாயிறு சம்பவத்தை வைத்துக்கொண்டு அரசியல் நடத்துவது உண்மையிலே கேவலமான விடயமாகும்.

இந்த நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என

அவர்கள் மனச்சாட்சியுடன் எண்ணி இருந்திருந்தால், கடந்த காலங்களிலே மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பம் மேற்கொண்ட அட்டூழியங்களுக்கு எதிராகவும், மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் குரல் கொடுத்திருக்க வேண்டும். பேராயர் கர்தினால் உட்பட இந்த விடயத்தில் அவர்கள் கவனம் செலுத்தியிருக்க வேண்டும் என்பது எனது கருத்து.

கடந்த காலங்களில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் எல்லாம் அவர்களுக்கு உறுத்தாத ஒரு நிலை. மனச்சாட்சி வேலை செய்யாத நிலை. இப்போது உயிர்த்த ஞாயிறு விடயத்தில் அவர்கள் நீதி கோருகின்றார்கள். நாமும் அதனை வலியுறுத்தும் நிலையில், ஏன் இவர்கள் எமது மக்களின் உரிமை மீறல்கள் தொடர்பில் குரல் கொடுக்கவில்லை? இதனைக் கண்டு கொள்ளாது இந்த நேரத்தில் இவர்கள் கூக்குரல் இடுவது என்பது வேடிக்கையாகும். உயர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும்.

வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் கூடப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால், இதனை ஒரு தேர்தல் உத்தியாகப் பாவிக்க வேண்டாம். படுகொலை செய்யப்பட்ட எல்லா மக்களுக்கும் நீதி வேண்டும். அதற்கு எதிர்க்கட்சித் தலைவர், தென்னிலங்கை அரசியல்வாதிகள் எல்லோரும் மனச்சாட்சியுடன் செயற்பட வேண்டும்.

எமது மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள். சர்வதேச விசாரணை தேவை என ஐ.நாவிடம் கூடக் கேட்டுள்ளோம். ஆனால், அதற்கெல்லாம் செவிமடுக்காத தென்னிலங்கை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் தற்போது சர்வதேச விசாரணை வேண்டுமெனக் கூக்குரல் இடுவது ஜனாதிபதித் தேர்தலுக்கான கூக்குரல் எனச் சந்தேகப்படுகின்றேன்.

எமது மக்களது உரிமை மீறல்களுக்கும் சர்வதேச விசாரணை தேவை என்பதையும் அவர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விடயத்தில் கூறுவது போன்று எமது மக்களின் விடயத்திலும் – எமது மக்களின் உரிமை மீறல் விடயத்திலும் கவனம் செலுத்தி குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படுவதற்கு எம்முடன் இணைந்து செயற்பட வேண்டும்." – என்றார்.

# குளங்களைப் பார்வையிடுவதற்கான நடைபயணம் நேற்று யாழ்ப்பாணத்தில்







– எஸ்.நிதர்ஷன் –

"நடந்தாய் வாழி வழுக்கை ஆறு" எனும் தொனிப் பொருளில் வழுக்கியாற்றின் வழிதோறும் உள்ள குளங் களைக் காணும் நடை பயணம் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இன்று காலை 8 மணிக்கு யாழ். தெல்லிப்பழையில் இருந்து ஆரம்பமான இந்தப் பயணம் அராலி நோக்கிச் சென்றது.

இந்தப் பயணத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் சுரேந்திரகுமார், சுவீ டன் விவசாய பல்கலைக்கழக தகைநிலை பேராசிரியர் ஸ்ரீஸ்கந்தராசா உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

# பொப்பி மலர் தினத்தை முன்னிட்டு ரணிலுக்கு பொப்பி மலர் அணிவிப்பு





பொப்பி மலர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் பொப்பி மலர் அணிவிக்கப்பட்டது.

இலங்கை ஓய்வுபெற்ற போர் வீரர்கள் சங்கத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் உபுல் பெரேராவினால் ஜனாதிப திக்கு பொப்பி மலர் அணிவிக்கப்பட் டது.

உலக யுத்தங்களின் போதும் 30 வருடகாலம் இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்திலும் உயிர் நீத்த இராணு வத்தினரின் நினைவாக இலங்கை ஓய்வுபெற்ற போர் வீரர்கள் சங்கத்தால் வருடாந்தம் பொப்பி மலர் தினம் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

பொப்பி மலர் விற்பனையால் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு இலங்கை ஓய்வுபெற்ற போர் வீரர்கள் சங்கத்துடன் இணைந்து செயற்படும் முப்படையிலிருந்து ஓய்வு பெற்றோர் அங்கத்துவம் வகிக்கும் 44 சங்கங் களின் 50 ஆயிரம் உறுப்பினர்களின் நலன்புரிச் செயற்பாடுகள் முன்னெடுக் கப்படுகின்றன.

இலங்கை ஓய்வுபெற்ற போர் வீரர்கள் சங்கத்தின் செயலாளர் லெப்டினன் கேணல் அஜித் சியம்லாபிட்டிய, பொரு ளாளர் மேஜர் ஜீ.கே.சீ. சாந்திலால் கங்கானம்கே, பொப்பி குழுவின் தலை வர் பிரிகேடியர் ஹேமந்த லியனகே, குழு உறுப்பினர்களான மேஜர் பீ.எச். வில்டஸ் டி சில்வா, கெப்டன்.டீ.எம்.எச். மடுல்கல்ல, கே.எச்.என்.சந்தி ஹெட்டி யராச்சி, ஐ.கே.ஏ.ரோஹனி உள்ளிட்டவர் கள் கலந்துகொண்டனர்.

அதனையடுத்து தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவுக் கும் பொப்பி மலர் அணிவிக்கப்பட் டது.

Build Your Dream home with us
NORTH WALL ENGINEERING
Nelliyady, Jaffna.
Our Recent Projects

"Experience a professional service like no other"
Our Services
- Architectural Designing.
- Structural Planning.
- 2D & 3D Drawing.
- BOQ Assessment.
- Interior Designing.
- Landscaping.
For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766

# சனல் 4 காணொலி விவகாரம்;

# பாதுகாப்பு அமைச்சின் அறிக்கைக்கு பேராயர் இல்லம் கடுமையான எதிர்ப்பு

சனல் 4 காணொலி ஊடாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை முழுமையாக நிராகரிக்கிறோம் என பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையை கொழும்பு பேராயர் இல்லம் வன்மையாக கண்டித்துள்ளது.

இந்த வெளிப்படுத்தல் தொடர்பில் உரிய முறையில் விசாரணை நடத்தாமல் அதனை உடனடியாக நிராகரிப்பது பொருத்தமற்ற செயற்பாடு என கொழும்பு பேராயர் இல்லத்தின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பட்ட ஆவணப்படத்தில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை உத்தியோகப்பூர்வமாக மறுப்பதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்திருந்தது.

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்காக ஏப்ரல் 21 தாக்குதல் நடத்தப்பட்டது எனவும் இதற்காக தேசிய புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே தற்கொலை குண்டுதாரிகளுடன் சந்திப்பை நடத்தினார் என்றும் அந்த ஆவணப்படத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள பாதுகாப்பு அமைச்சு, சனல் 4இன் குற்றச்சாட்டை நிராகரிப்பதாக நேற்று அறிவித்திருந்தது.

இந்தநிலையில், கொழும்பு ஆயர் இல்லம் குறித்த அறிக்கைக்கு கண்டனம் வெளியிட்டுள்ளது.

இந்தக் காணொலியில் உள்ள சில விடயங்கள் குறித்து பரபரப்பாக பேசப்பட்டாலும், இதில் சந்தேகத்திற்குரிய பகுதிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறிப்பாக பிள்ளையானின் நடவடிக்கைகள், தற்கொலை குண்டுதாரிகள் போன்ற சில வெளிப்படுத்தல்கள் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளன.

மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேவை தூக்கிலிடவோ, கோட்டாபயவை ஆயுள் முழுவதும் சிறையில் அடைக்கவோ கோரவில்லை.

மாறாக இந்த காணொலி வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில்




தீவிரமாக விசாரித்து பின்னர் அறிக்கை வெளியிட வேண்டும் என ஆயர் இல்லம் கோரியுள்ளது.

இந்தநிலையில், ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை மேலும் துன்பத்தில் ஆழ்த்தும் வகையில் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையை வன்மையாக கண்டிக்கிறோம் என கொழும்பு பேராயர் இல்லத்தின் செய்தி தொடர்பாளர் அருட்தந்தை ஜுட் கிரிஷாந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# போலி பெறுபேற்றுச் சான்றிதழைச் சமர்ப்பித்து 3 வருடங்கள் ஆசிரியப் பணியிலிருந்தவர் கைது

க.பொ.த உயர்தரப் பரீட்சையின் போலியான பெறுபேற்று சான்றிதழை சமர்ப்பித்து 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் ஆசிரியர் சேவையில் கடமையாற்றிய நபரை யாழ்ப்பாணம் சிறப்பு குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

அவருக்கு போலிப் பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழைத் தயாரித்து வழங்கியவரும் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர் .

ஆசிரியர் சேவை பதவிநிலை உயர்வு பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேற்று சான்றிதழ் உறுதிப்படுத்தலுக்காக பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்ட போதே அது போலியானது எனக் கண்டறியப்பட்டு மோசடி குற்றச்சாட்டின் கீழ் சிறப்பு குற்றத் தடுப்பு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கல்வி வலய பாடசாலை ஒன்றில் கற்பித்த ஒருவரே நேற்று வெள்ளிக்கிழமை நேற்று முன்தினம் இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

இந்நபர் இராணுவ சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் கடமையாற்றிய சில வருடங்களின் பின் மாகாண கல்வி அமைச்சினால் தொண்டர் ஆசிரியராக இணைக்கப்பட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டில் தொண்டர் ஆசிரியர்களை ஆசிரியர் சேவை தரம் 3இற்கு உள்ளீர்க்கும் போது இவருக்கும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

3 வருடங்களுக்கு மேலாக ஆசிரியராக சம்பளம் பெற்று வந்த நிலையில் பதவிநிலை உயர்வுக்காக கல்வித் தகைமை ஆவணங்களை அவர் சமர்ப்பித்துள்ளார்.

க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர் தரப் பரீட்சை சான்றிதழ்கள் பரீட்சைகள் திணைக்களத்துக்கு உறுதிப்படுத்தலுக்காக அனுப்பிவைக்கப்பட்டன.

அவற்றில் க.பொ.த. உயர்தர பரீட்சை சான்றிதழ் சுட்டெண் தவறு என்பது கண்டறியப்பட்டு பரீட்சைகள் திணைக்களத்தினால் பொலிஸ் திணைக்களத்துக்கு அந்நபர் மீது மோசடிக் குற்றச்சாட்டின் கீழ் அறிக்கையிடப்பட்டது.

பொலிஸ் திணைக்களத்தினால் அந்த நபர் மீதான விசாரணை யாழ்ப்பாணம் பொலிஸ் சிறப்புக் குற்ற விசாரணைப் பிரிவுக்கு மாற்றப்பட்டது.




பொலிஸ் இன்ஸ்பெக்டர் குணரோஜன் தலைமையிலான சிறப்பு குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து மோசடி நபரை கைது செய்தனர்.

அத்துடன், அவருக்கு உயர்தரப் பரீட்சையின் போலி சான்றிதழைத் தயாரித்து வழங்கிய நபரும் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட மோசடி நபர் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளில் சித்தியடையவில்லை என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்ததாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் நேற்று யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட இருந்தனர்.

# வெளிநாட்டு நோயாளர்களை நாட்டுக்கு ஈர்க்க நடவடிக்கை!

## சுகாதார கொள்கையில் மாற்றம் வேண்டும் என்கிறார் ஜனாதிபதி

வெளிநாட்டு நோயாளர்களை நாட்டுக்கு ஈர்க்கும் வகையில் மருத்துவ சுற்றுலாத்துறை மற்றும் சுகாதார சேவைகள் என்பவற்றை உயர் தரத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கு உகந்த, முழுமையான சுகாதார கொள்கை அவசியமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதற்காக அதிக எண்ணிக்கையில் வைத்தியர்களை உருவாக்குவதற்கு வைத்திய பீடங்களையும் பல்கலைக் கழகங்களையும் ஆரம்பிக்க வேண்டியது அவசியம் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அரசாங்கத்தினால் நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் வைத்திய காப்புறுதி பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் கூறினார்.

ஜோசப் பிரேசர் வைத்தியசாலையில் நடைபெற்ற நூற்றாண்டு விழாவிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் உள்ள வைத்தியசாலைகள் எதிர்காலத்தில் இலங்கையர்களுக்கு மட்டுமன்றி வெளிநாட்டினருக்கும் தேவையான சேவைகளை வழங்க முடியும். இதன் வடிவமைப்பைப் பார்க்கும் போது, இது ஹோட்டலா, வைத்தியசாலையா என்று கேள்வி எழும். நீங்கள் இங்கு வந்து பார்க்கும் போது நோயாளர்களை பார்க்க வந்திருக்கிறோமா, வார இறுதி விடுமுறையை கழிக்க வந்திருக்கிறோமா என்ற கேள்வி ஏற்படும். வைத்தியசாலையில் சேவைகள் இவ்வகையிலேயே உயர் தரத்தில் காணப்பட வேண்டும்.

இந்த நாட்டுக்கு வெளிநாட்டு நோயாளர்களை மருத்துவ தேவைக்காக வரவழைப்பதற்கு மருத்துவ சுற்றுலாத்துறை மற்றும் சுகாதார சேவைகள் என்பன உயர் தரத்தில் காணப்பட வேண்டும். அவ்வாறான சேவைக்கு இந்த வைத்தியசாலையே உதாரணமாகும். எமது சுகாதார கொள்கை தொடர்பில் நாம் மீளச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்நாட்டி வைத்தியசாலை கட்டமைப்பு அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகள் என பிளவுபட்டு காணப்படுகின்றன. பெருமளவான வைத்தியர்கள் நாட்டை விட்டுச் செல்கிறார்கள்.

அதனால் நாட்டிற்குள் அதிகளவில் வைத்தியர்களை உருவாக்க வேண்டியுள்ளது. அதற்கமைய முதலாவது அரச சார்பற்ற வைத்திய பீடத்தை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம்.

தெற்காசியாவின் தொழில்நுட்ப நிறுவனமான இனை மொறட்டுவ வைத்தியசாலைக்கு கையளித்துள்ளோம்.




அதேபோல் இன்னும் பல மருத்துவ பல்கலைக்கழகங்களை நாட்டில் ஆரம்பிக்க முடியும் என நம்புகிறோம். வைத்தியர்களை அதிகளவில் உருவாக்குவதற்கு அதனை தவிர மாற்று வழிகள் எவையும் இல்லை.

இலங்கை வைத்தியர்கள் இல்லாமல் ஐக்கிய இராச்சியம் தனது வைத்தியசாலைகளை நடத்திச் செல்வதில் நெருக்கடியை எதிர்கொள்கிறது. அதனால் பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இந்தியாவுடன் சேர்ந்து, நாங்கள் ஐக்கிய இராச்சியத்தின் வைத்தியசாலை கட்டமைப்பை நாமும் நடத்திச் செல்கிறோம் என்று கூறினால் தவறாகாது.

உதவி பெறும் நாடாக மட்டுமன்றி, உதவி வழங்கும் நாடாகவும் இலங்கை மாற வேண்டும். மேலும், அரச மற்றும் தனியார் துறைகள் இணைந்து செயற்படுவதற்கான செயற்றிட்டங்களை நாம் தயாரித்துள்ளோம்.

அரசாங்கத்தினால் நாட்டு பிரஜைகளுக்கு மருத்துவக் காப்புறுதி பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது. அப்போது சிகிச்சைக்காக தனியார் வைத்தியசாலைக்குச் செல்வதா அரச வைத்தியசாலையை நாடுவதா என்பதை மக்கள் தீர்மானிப்பர்.

இந்த நாட்களில் நானும் ஒரு வைத்தியரை போலவே செயற்படுகிறேன். மரணத்தின் இறுதி தருவாயிலிருக்கும் நோயாளியை சுமந்துச் செல்லும் அதேநேரம் அவருக்கு சிகிச்சையளித்து காப்பாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறேன்.

திறந்த பொருளாதார கட்டமைப்பின் கீழ் நாடு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. அதனால் தனியார் நிறுவனங்களும் அபிவிருத்தி அடையலாம். அவ்வாறு இல்லாவிட்டால் நாட்டுக்கு முன்னேற்றம் கிட்டாது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# அசானிக்கு ஆதரவு தெரிவித்து தனி கிரிக்கெட் அணி உதயம்!



“மலையகக் குயில்” என அனைவராலும் போற்றி புகழப்பட்டு வரும் இளம் பாடகி அசானிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தமது கிரிக்கெட் அணிக்கு ‘அசானி’ எனப் பெயர் சூட்டியுள்ளனர் புசல்லாவ – கலுகல்ல பகுதி இளைஞர்கள்.

புசல்லாவ, கலுகல்ல தோட்டத்தில் வசிக்கும் இளைஞர்களுக்கிடையிலான புரிந்துணர்வை வலுப்படுத்தும் வகையில் ‘கலுகல்ல பிரீமியர் லீக்’ கிரிக்கெட் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் ‘கோபி’ விளையாட்டுக் கழகத்தின் சார்பிலும் அணியொன்று களமிறங்கியுள்ளது. அந்த அணியே, மலையக மண்ணுக்குப் புகழ் சேர்த்துள்ள அசானிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தமது அணிக்கு அசானி எனப் பெயர் சூட்டியுள்ளது. ‘ரீசெட்’டுகளிலும் அசானியின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அணியின் தலைவராக விமல் பதவி வகிக்கின்றார்.

‘கலுகல்ல பிரீமியர் லீக்’ கில் 10 அணிகள் பங்கேற்றுள்ளன.

# நாட்டு மக்கள் யார் பக்கம் என்பதை தேர்தல் நடந்தால் காண்பிப்போம்!

## ராஜபக்ஷக்களின் சகா இறுமாப்பு

“சனல் – 4 வீடியோ போன்ற சூழ்ச்சிகள் மூலம் ராஜபக்ஷக்களினதோ அல்லது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினதோ அரசியல் பயணத்தைத் தடுக்க முடியாது. தேர்தலொன்று நடக்கட்டும், மக்கள் யார் பக்கம் என்பதைக் காண்பிப்போம்.”

– இவ்வாறு சூளுரைத்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ரோஹித அபேகுணவர்த்தன.

இது தொடர்பில் அவர் கூறியதாவது:–

“கோட்டாபய ராஜபக்ஷவை வெற்றிபெற வைக்கவே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் திட்டமிடப்பட்டதாம் எனக் கூறப்படுகின்றது. 2019 இல்தான் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடத்தப்பட்டது, ஆனால் 2018 பெப்ரவரியில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாம் அமோக வெற்றியைப் பதிவு செய்து விட்டோம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிந்த கையோடு மொட்டுக் கட்சி அல்ல, நாட்டு மக்கள்தான் கோட்டாபய ராஜபக்ஷவைக் கோரினர். இதுதான் உண்மை.



அதேவேளை, சனல் – 4 திரைப்படம் இப்ராஹிம் என்பவரை ஏன் மறந்தது? இப்ராஹிம் என்பவர் ஜே.வி.பியின் தேசியப் பட்டியல் வேட்பாளராக இருந்தார். அவரின் இரு மகன்மார் தற்கொலை குண்டுதாரிகள். இந்த விடயம் ஏன் மறக்கப்பட்டது? இப்படியான நகர்வுகள் மூலம் எமது அரசியல் பயணத்தைத் தடுக்க முடியாது.” – என்றார்.

# காணித் தகராறால் ஒருவர் வெட்டிக்கொலை!

## – நுவரெலியாவில் பயங்கரம்



நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீப்பிலிமான பகுதியில் நபர் ஒருவர் நேற்று வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வத்தளைப் பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய எஸ்.சுந்தரலிங்கம் என்பவரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் கொழும்பு – வெள்ளவத்தை பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காணித் தகராறு காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது எனத் தெரிவித்த பொலிஸார், சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளார் எனவும், அவரைக் கைது செய்வதற்கான விசாரணை ஆரம்பமாகியுள்ளது எனவும் குறிப்பிட்டனர்.

நுவரெலியா மாவட்ட நீதிவான் சம்பவ இடத்துக்கு வருகை தந்து, விசாரணைகளை மேற்கொண்ட பின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது எனவும் நுவரெலியா பொலிஸார் குறிப்பிட்டனர்.

# அடுத்த வருடமும் தனியாரிடமிருந்து மின் கொள்வனவு செய்ய வேண்டும்!

## எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவிப்பு

அடுத்த வருடமும் தனியாரிடம் மின்சாரத்தைக்கொ ள்வனவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும் என எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதற்கான அறிவித்தல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது என தனது சமூக வலைத்தளத்தில் கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

2024 ஆம் ஆண்டு மழைவீழ்ச்சி குறைவான வருடமாக எதிர்வுகூறப்பட்டுள்ளது. இந்த நிலையில், முன்னேற்பாடாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டில் மழைவீழ்ச்சி குறைவடைந்துள்ளமையினால், நீர்மின் உற்பத்தியை 3500 முதல் 3750 கிகா வாட் மணித்தியாலங்களுக்கு மட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




எவ்வாறாயினும், அனல் மின் உற்பத்தியைப் பயன்படுத்தி தொடர்ச்சியாக மின்சாரத்தை விநியோகிப்பதற்கான வேலைத்திட்டத்தை செயற்படுத்தி வருகிறோம் என்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

# தெற்காசியாவின் கல்வி மையமாக இலங்கை விரைவில் மாற்றப்படும்

## உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் உறுதி

நான்கு வருடங்களின் பின்னர் கல்வி பொது தராதர உயர் தர பரீட்சையில் சித்தி யடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 63 வீதத்தால் அதிகரித்துள்ளது என உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடை பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் இதனைத் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல், கொவிட் தொற்று உள்ளிட்ட காரணங்களால் உயர் கல்விக்கு ஏதே னுமொரு வகையில் பின்னடைவு ஏற்பட்டிருந்தது என அவர் தெரிவித்துள் ளார்.

இந்த நிலையில், இம்முறை க.பொ.த உயர் தர பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் பல்கலைக் கழகங்களில் இணைத்துக்கொள்வதற் கான போதிய பௌதீக வளம் இல்லை யென உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தரத்திற்கு அமைவாக, பல்கலைக்கழகமொன்றில் 15 மாணவர் களுக்கு ஒரு விரிவுரையாளர் இருக்க வேண்டியது அவசியமென அவர் குறிப் பிட்டுள்ளார்.

எனினும், இலங்கையின் பல்கலைக் கழகங்களில் 30 மாணவர்களுக்கு ஒரு விரிவுரையாளர் என்ற கட்டமைப்பே காணப்படுகிறது என அவர் கூறியுள்ளார்.

எனவே, உயர் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கும், பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களை மேம்படுத்து வதற்கும் கல்வி சீர்திருத்தம் முன்மொழி யப்பட வேண்டுமென அவர் வலியுறுத் தியுள்ளார்.

பல்கலைக்கழக கல்விச் சீர்திருத்தத் தில், கலைப் பிரிவில் கற்கும் மாணவ, மாணவியரும் இளங்கலை விஞ்ஞானப் பட்டம் பெறும் வகையில் கல்வி முறை உருவாக்கப்பட வேண்டுமென உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உயர்தர விஞ்ஞானப் பாடங்கள் தொடர்பில் பாடசாலை ஆசிரியர்க ளுக்கு மேலதிகமாக தனியார் கல்வி நிலை யங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களின் நேரத்தைப் பெற்றுக்கொள்ளும் வேலைத் திட்டமும் முன்மொழியப்பட்டுள்ளது என அவர் கூறியுள்ளார்.

உயர் தரத்தில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் பல்கலைக் கழகத்தில் இணைத்துக்கொள்ள வேண் டுமாயின், ஆய்வுக்கூடங்கள், விடுதிகளை நிர்மாணிப்பது உள்ளிட்ட பௌதீக வசதி களை வழங்கவும் மனித வளங்களை மேம்படுத்துவதற்கும் இரண்டு ட்ரில்லியன் ரூபா தேவைப்படுகிறது என மதிப்பி டப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள் ளார்.

இவ்வாறு முழுமையான கல்வி சீர்திருத் தம் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின்,



ஊழியர் சேமலாப நிதியத்தில் உள்ள தொகையில் சுமார் 50 வீதமளவில் நிதி தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, பொருளாதார ரீதியில் நெருக்கடியில் உள்ள ஒரு நாடு தற் போது இவ்வாறான பாரிய தொகையை ஒதுக்குவது சாத்தியமற்றது என்ற வகை யில், உயர் கல்விக்கான சீர்திருத்தங் களை மேற்கொள்ளும்போது பல்வேறு மாற்று வழிகளைக் கையாள்வது குறித்து முன்மொழிவுகள் பரிந்துரைக்கப் பட்டுள்ளன என உயர் கல்வி இரா ஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராக வன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தெற்காசியாவின் கல்வி மையமாக இலங்கை மாற்றப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

# பராமரிப்பாளர் வேலைகளுக்காக 566 இலங்கையர்கள் இஸ்ரேலுக்கு

பராமரிப்பாளர் பணிகளுக்காக 566 இலங்கையர்கள் இஸ்ரேலுக்குச் சென்றுள்ளனர் என்று இலங்கை வெளி நாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கமைய, அந்த இலங்கையர்களுக்கு அந்த நாட்டில் தொழிலுக் கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 12ஆம் திகதி இஸ்ரே லுக்குப் பராமரிப்பாளர் பணிகளுக்காகச் செல்லவிருக் கும் மற்றுமொரு இலங்கையர் குழுவுக்கு நேற்றுமுன் தினம் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் விமான பயணச்சீட்டு வழங்கப்பட்டது.



# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் விடுதலைப்புலிகளின் தகட்டிலக்கம் மீட்பு?

## ஊடகங்களுக்குத் தகவல் தர சட்ட வைத்திய அதிகாரி மறுப்பு














– விஜயரத்தினம் சரவணன் –

முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் நேற்று நான்காம் நாள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வாய்வில் விடுதலைப்புலிகளின் தகட்டிலக்கம் ஒன்று மீட்கப்பட்டது என்று உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்நிலையில் நான்காம் நாள் அகழ்வாய்வுகளின் முடிவுகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவனிடம் வினவியபோது, அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்க மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த 6ஆம் திகதி புதனன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் நான்காம் நாள் அகழ்வாய்வுகள் நேற்று (09) முல்லைத்தீவு நீதிவான் தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்றது.

இந்த அகழ்வாய்வுகள் தொல்லியல் ஆய்வாளர் பரமு புஷ்பரட்ணம், யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவன், சட்டத்தரணி எஸ்.துஷ்யந்தி, தடயவியல் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் ஆகியோரின் பங்கேற்புடன், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு நான்காம் நாள் அகழ்வாய்வுகள் இடம்பெற்றபோது, ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிக்க அனுமதிக்கப்படவில்லை. அது குறித்து கேள்வி எழுப்பப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவன், அகழ்வுப் பணி இடம்பெறும்போது ஊடகங்களுக்குச் செய்தி சேகரிக்க அனுமதி வழங்கக்கூடாது எனக் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் மதிய உணவு அருந்துவதற்காக அகழ்வாய்வுகள் இடைநிறுத்தப்பட்டபோது ஊடகவியலாளர்கள் மனிதப் புதைகுழியை புகைப்படம் எடுக்கவும், வீடியோ எடுக்கவும் அனுமதியளிக்கப்பட்டது.

அத்தோடு குறித்த அகழ்வுப் பணிகளில் விடுதலைப்புலி அமைப்பு உறுப்பினர்கள் பயன்படுத்தும் “இ” எழுத்துடைய இலக்கத்தகடு ஒன்று கண்டெடுக்கப்பட்டது என்று அறியமுடிகின்றது.

இந்நிலையில் நான்காம் நாள் அகழ்வாய்வுகள் தொடர்பில், யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவனிடம் ஊடகவியலாளர்கள் வினவியபோது அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்க மறுப்புத் தெரிவித்தார்.

நான்காம் நாள் அகழ்வாய்வுகளின் போது ஊடகவியலாளர்களுக்குச் செய்தி சேகரிப்பதற்கு அனுமதி மறுத்தமை மற்றும் அகழ்வாய்வுகள் தொடர்பான முடிவுகளை ஊடகங்களுக்கு வெளிப்படுத்த மறுத்தமை அகழ்வுப் பணி தொடர்பில் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

இந்த அகழ்வுப் பணிகளைப் பார்வையிடுவதற்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் வருகை தந்திருந்தனர்.

அதேவேளை, இன்று ஞாயிற்றுக்கிழமை அகழ்வுப் பணி இடம்பெறாது எனவும், நாளை திங்கட்கிழமையே ஐந்தாம் நாள் அகழ்வாய்வுகள் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நேற்று அகழ்வுப் பணி இடம்பெறும் இடத்தில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் இராமலிங்கம் சத்தியசீலன், சமூகச் செயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# டில்லி பிரகடனத்தின் மூலம் வரலாறு படைக்கப்பட்டுள்ளது

## ஜி -20 உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி தெரிவிப்பு




ஜி 20 உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியா சென்றுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

ஜி 20 மாநாட்டில் பங்கேற்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இந்தியா சென்றுள்ளார். அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் அவர் இந்தியா செல்வது இதுவே முதல்முறையாகும்.

நேற்று இரவு 7 மணி அளவில் புதுடில்லி விமான நிலையத்தை சென்றடைந்த அவரை, மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் வி.கே. சிங் வரவேற்றார். இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் எரிக் கார்செட்டியும் உடன் இருந்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியை வரவேற்கும் விதமாக விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட நடன நிகழ்ச்சியை ஜோ பைடன் பார்த்து ரசித்துள்ளார்.

இதையடுத்து, ஜனாதிபதி ஜோ பைடன், பிரதமர் நரேந்திர மோடியை அவரது இல்லத்திற்குச் சென்று சந்தித்துள்ளார். இதன்போது, இருதரப்பு உறவை மேம்படுத்துவது தொடர்பாக இரு தலைவர்களும் பேச்சு நடத்தியுள்ளனர்.

அத்துடன், இந்தியாவில் ஜெட் என்ஜின்களை கூட்டாக தயாரிக்கும் ஒப்பந்தத்தின் முன்னேற்றம், ஆயுதம் தாங்கிய ஆளில்லா விமானங்களை வாங்குதல், சிவில் அணுசக்தி பொறுப்பு மற்றும் வர்த்தகம் தொடர்பான ஒப்பந்தம் குறித்து இந்த சந்திப்பின்போது பேசப்பட்டுள்ளது என தகவல் வெளியாகி உள்ளது.

இதேவேளை, மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் குமார் யுக்நாத், பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா ஆகியோர், பிரதமர் நரேந்திர மோடியை அவரது இல்லத்திற்குச் சென்று சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்த நாடுகளுடனான இந்தியாவின் இருதரப்பு உறவுகளை ஆய்வு செய்வது, வளர்ச்சி ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது போன்ற விடயங்கள் இந்த சந்திப்புகளின் முக்கிய நோக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பிரதமர் நரேந்திர மோடி, எதிர்வரும் இரண்டு நாட்களில் 15 இற்கும் மேற்பட்ட இருதரப்பு சந்திப்புகளை நடத்தவுள்ளார்.

# சந்திரபாபு நாயுடு கைது!


இந்தியாவின் ஆந்திர மாநில முன்னாள் முதலமைச்சரும், தெலுங்கு தேசம் கட்சியின் தேசிய தலைவருமான சந்திரபாபு நாயுடு நேற்று கைது செய்யப்பட்டார்.

திறன் மேம்பாட்டுத் திட்ட முறைகேடு வழக்கில் ஆந்திர மாநில குற்றப் புலனாய்வுத் துறையினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையிலான ஆட்சிக் காலத்தில், திறன் மேம்பாட்டு கழகத்தில் 317 கோடி இந்திய ரூபா ஊழல் இடம்பெற்றது என்று நான்கரை வருடங்களுக்கு முன்னர் இந்த வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கில் ஆந்திர மாநில முன்னாள் முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவுடன் தெலுங்கு தேச சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான கண்ட சிறீநிவாச ராவும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், சந்திரபாபு நாயுடு தனது சமூக வலைத்தள பதிவில், கடந்த 45 ஆண்டுகளாக நான் தன்னலமற்ற சேவையில் ஈடுபட்டுள்ளேன். தெலுங்கு மக்களின் நலனுக்காக எனது வாழ்க்கையை தியாகம் செய்யவும் நான்



தயாராக இருக்கிறேன்.

தெலுங்கு மக்களுக்கு சேவையாற்றுவதிலிருந்து என்னை ஏதும் தடுக்க முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

# மொராக்கோவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் உயிரிழப்பு!





மொராக்கோவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 37ஆக அதிகரித்துள்ளது.

மேலும் ஆயிரத்து 204 பேர் காயமடைந்துள்ளனர் என அந்த நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது. அவர்களில் 721 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

மொராக்கோவில் நேற்று முன்தினம் நள்ளிரவு 11.11 மணிக்கு ரிக்டர் 6.8 அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து 19 நிமிடங்களுக்கு பின்னர் 4.9 மெக்னிட்யூட் அளவில் மற்றுமொரு நிலநடுக்கமும் பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கங்கள் காரணமாக பாரிய கட்டடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவித் துள்ளன.

நள்ளிரவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

அந்த நாட்டின் தலைநகர் ரபற் முதல் மரகேச் வரை நிலநடுக்கத்தால் சேதம் ஏற்பட்டுள்ளது. நாட்டில் அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் பகுதிகளிலும் பயங்கர பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கடந்த 2004 ஆம் ஆண்டு மொராக்கோவின் வடகிழக்கு பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 628 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## உக்ரைனுக்கு சென்ற பிரித்தானியர் கைகள் கட்டப்பட்டு கொடூரமாக கொலை





உக்ரைன் போரில் ரஷ்யாவுக்கு எதிராக போரிடச்சென்ற பிரித்தானியர் ஒருவர் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்திலுள்ள புர்ன்லி என்னும் இடத்தைச் சேர்ந்த ஜோர்டன் 2022 ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் உக்ரைனுக்கு ஆதரவாக ரஷ்யாவுக்கு எதிராக போரிடுவதற்காக உக்ரைன் சென்றுள்ளார்.

இந்த நிலையில், ஜுன் மாதம், 26 ஆம் திகதி நீர் நிலை ஒன்றில், கைகள் பின்பக்கமாக கட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது மரணம் தொடர்பான விசாரணை அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தன் மகனுடைய தைரியம் மற்றும் மனம் தளராமை ஆகிய குணங்களால் தாங்கள் பெருமிதம் அடைந்தாலும், அவரது மரணம் தங்களை அதிர்ச்சியும், கவலையும் அடைய வைத்துள்ளது என ஜோர்டனின் தாயாகிய பிரெண்டா தெரிவித்துள்ளார்.

## உக்ரைனில் தேர்தல் நடத்தும் ரஷ்யா!



உக்ரைனில் கடந்த ஆண்டு ஆக்கிரமிக்கப்பட்ட ஆனால் முழுமையாக தனது கட்டுப்பாட்டில் வராத பகுதிகளில் ரஷ்யா தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு முயற்சி மேற்கொண்டுள்ளது.

இதன் ஒருபகுதியாக அங்கு உள்ளாட்சி தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

இதன்படி டொனெட்ஸ்க், லுஹான்ஸ்க், கெர்சன் மற்றும் சபோரிஜியா பிராந்தியங்களில் ரஷ்யாவால் உள்ளாட்சி தேர்தல் நடத்தப்படுகின்றது. இங்கு நேற்று முன்தினம் வாக்குப்பதிவு தொடங்கியது. இன்று தேர்தல் முடிவடைகின்றது.

உக்ரைன் அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், ரஷ்யாவின் செயல்பாடு சர்வதேச சட்டத்தின் அப்பட்டமான மீறல் ஆகும். தீவிரமாக போர் நடத்தும் பகுதிகளில் ரஷ்யா வாக்குப்பதிவை நடத்தவது உக்ரைன் உயிர்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளது. வாக்கெடுப்பின் முடிவுகளை மற்ற நாடுகள் அங்கீகரிக்க வேண்டாம் என்று வலியுறுத்தி இருக்கிறது.



# ஆசியக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்காக கொழும்பில் விசேட பாதுகாப்பு நடவடிக்கை

2023 ஆசியக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்காகக் கொழும்பில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் அமுல்படுத் தப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

வீரர்கள் மற்றும் ரசிகர்களின் பாது காப்பை உறுதி செய்ய பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து இந்த பாதுகாப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, கொழும்பு ஆர்.பிரேம தாச மைதானத்தை சுற்றியுள்ள பகுதி களில் நேற்று முதல் விசேட போக்கு வரத்து திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

# சுற்றுலாப் பயணிகளின் வருகை 82.2 சத வீதத்தால் அதிகரிப்பு!

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடு கையில், இந்த வருடம் ஓகஸ்ட் மாதத் தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

இந்த வருடம் ஓகஸ்ட் மாதத் தில் ஒரு லட்சத்திற்கும் அதிக மான சுற்றுலாப் பயணி கள் நாட்டிற்கு வருகை தந் துள்ளனர் என மத்திய வங்கி அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் 37 ஆயி ரம் சுற்றுலாப் பயணிகளே நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

இதன்படி, 2023 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் சுற்றுலாப் பயணி களின் எண்ணிக்கை 82.2 வீதத்தி னால் அதிகரித்துள்ளது என மத் திய வங்கி சுட்டிக்காட்டியுள் ளது.







# தமிழினப் படுகொலை விவகாரத்துக்கு சர்வதேச விசாரணை நடாத்தியிருந்தால் ஈஸ்டர் படுகொலை தடுக்கப்படிருக்கும்!

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் கருத்து

2009 முள்ளிவாய்க்காலில் மிகக் கோரமாக நடந்த தமிழ் இனப்படு கொலைக்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச விசாரணை மூலம் நீதி வழங்கப்படிருந்தால் 2019 உயிர்த்த ஞாயிறு படுகொலை நடைபெற சந்தர்ப்பம் கிடைத்திருக்க வாய்ப்பில்லை.

– இப்படித் தெரிவித்திருக்கின்றார் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் ரெலோ பிரமுகருமான சபா குகதாஸ். இது தொடர்பாகக் கருத்த. வெளியிடுகையில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

ஈஸ்டர் படுகொலைக்கான ஆதாரம் “சனல்–4“ தொலைக்காட்சியில் வெளியாகிய பின்னர் நாடாளுமன்றத்தில் பல குரல்கள் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என மேலேழுந்தன. இது ஒருவகையில் சிலரது அரசியல் உள் நோக்கமாக இருந்தாலும் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதற்கு



தமிழர்களிடம் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் தென்னிலங்கையில் கர்தினால் உட்பட தற்போது கதறும் தரப்புக்கள் கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்கின்றனர்.

அன்று முள்ளிவாய்க்கால் படுகொலையை அரங்கேற்றிய அதே தரப்பினர்தான் ஈஸ்டர் படுகொலையை அரங்கேற்றினார்கள் என்பது தற்போது நிரூபணமாகிவிட்டது. ஆகவே அன்று முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு சர்வதேச விசாரணை மேற் கொண்டு நீதி வழங்கியிருந்தால் உயிர்த்த ஞாயிறு படுகொலை நடந்திருக்க மாட்டாது.

எதிர்வரும் காலத்திலும் வேறு வடிவங்களில் ஆட்சிக் கதிரையைப் பிடிக்க இப்படியான நிகழ்வுகள் அரங்கேற்றப்படலாம். அதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமாக இருந்தால் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கும் உயிர்த்த ஞாயிறு படுகொலைக்கும் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

வணக்கத்திற்குரிய கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் இன்று கூவும் தென்னிலங்கைத் தரப்புக்கள் முதலில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணையை கோருங்கள். உயிர்த்த ஞாயிறு படுகொலைக்கு தானாகவே நீதி கிடைக்கும். அத்துடன் தங்கள் சுயலாபத்திற்காக மக்களை கொன்றெழிக்கும் கலாசாரத்திற்கு அதனை மேற் கொள்ளும் சூத்திரதாரிகளின் செயற்பாடுகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்கமுடியும்.





# மாளிகாவத்தைச் சூட்டுச் சம்பவத்தின் சந்தேக நபர்களுள் ஒருவர் சிக்கினார்

கொழும்பு, மாளிகாவத்தை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது வாழைத்தோட்டம் பிரதேசத்தைச் சேர்ந்த பொடிகவி என்னும் நபரை கொலை செய்தமைக்கு பழிவாங்கும் நோக்கில் இந்தத் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

மாளிகாவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த முதலாம் திகதி பழுது பார்க்கும் நிலையமொன்றுக்குள் இருந்த நபர் மீது இனந்தெரியாத இரு துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றிருந்தனர்.

இதன்போது பலத்த காயமடைந்த நிறுவனத்தின் உரிமையாளர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற செயல்களுடன் தொடர்புடைய குற்றவாளியான மாளிகாவத்தை நெவிலின் உறவினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டனர். துப்பாக்கிச் சூட்டுக்கு மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவர் வாழைத்தோட்டம் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டு சந்தேக நபர் அந்தப் பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்று மல்வானை பிரதேசத்தில் தலைமறைவாகியுள்ளார்.

சந்தேக நபர் ஹெரோயின் கொள்வனவு செய்வதற்காக வெல்லம்பிட்டிய பிரதேசத்திற்கு வருகிறார் என்ச்க்கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் வைத்து சந்தேக நபர் 05 கிராம் 180 மில்லி கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் நடத்திய விசாரணையில் சிறு வயதில் இருந்தே தனது நெருங்கிய நண்பரான பொடிகவி கொலை செய்யப்பட்டமைக்கு பழிவாங்கும் நோக்கில் இந்தத் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டதாக அவர் கூறியிருக்கின்றார். பொடி கவியின் கொலையைத் திட்டமிடுவதற்கு நெவில் என்பவரே காரணம் என சந்தேக நபர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்கிசையில் தொடர்மாடிக் குடியிருப்பின் மாடியில் இருந்து வீழ்ந்து யுவதி உயிரிழப்பு

கல்கிசை - அல்விஸ் பிளேஸில் அமைந்துள்ள தொடர்மாடிக் குடியிருப்பின் 13 ஆவது மாடியிலிருந்து வீழ்ந்து 27 வயதான யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது கொலையா அல்லது தற்கொலையா என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பெண் தொழிலாளர்கள் குளவி கொட்டுக்கு இலக்கு



(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா,செப்.20

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள ஆர்.பி.கே.பிளான்டேசனுக்கு உரித்தான மஸ்கெலியா கிலன்டில் தோட்டத்தில் நேற்று மாலை 4 மணிக்கு தேயிலை கொழுந்து பறித்து கொண்டு இருந்த வேளையில் தேயிலை செடிகளின் அடி பகுதியில் இருந்த குளவி கூடு களைந்து அங்கு பணியாற்றிய பெண்களை தாக்கியதால் ஏழு பெண்கள் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதி பட்டனர்.

அவர்களில் மூன்று பெண்கள் சிகிச்சை பெற்று வெளியேறி உள்ளனர். நான்கு பேர் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மாலை வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது என தோட்ட வெளிக்கள உத்தியோகத்தர் தெரிவித்தார்.



# போத்தலில் அடைக்கப்பட்ட நீரை விட சுட வைத்து ஆறிய கிணற்று நீர் நல்லது

## சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி விளக்கம்

(த.சுபேசன்)

போத்தலில் அடைக்கப்பட்ட நீரை விட கிணற்று நீரை சுட வைத்துக் குடிப்பதே உடலுக்குச் சிறந்தது என சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினுடைய வைத்திய அதிகாரி சி.சுதோகுமார் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் கொடிகாமம் நட்சத்திரமஹாலில் இடம்பெற்ற சுகாதார நூல் வெளியீட்டு நிகழ்வொன்றில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கூறியவை வருமாறு:-

நீர் பாதுகாப்பு என்ற விடயத்தில் எம் மக்கள் பிழையான வழியை பின்பற்றுகின்றனர். போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் மிக நலம் எனக் கருதுகின்றனர். போத்தலில் அடைக்கப்பட்ட நீரை அருந்துவதன் மூலம் சில நீர் மூலங்கள் எமக்கு கிடைக்காமல் போகக்கூடும். உண்மையில் கிணற்று நீரை சுட வைத்து அருந்துவதே சிறந்தது. போத்தலில் அடைக்கப்பட்ட நீரைத்தான் அருந்த வேண்டும் என நாம் ஒருபோதும் தெரிவிக்கவில்லை.

அத்துடன் எமது நாட்டில் தொழிற்துறை சார்ந்த அறிவு இல்லாமையே தவறுகள் இடம்பெறக் காரணமாக அமைந்து விடுகின்றன. இங்கு வேறு தொழில் புரிபவர்கள் அந்த தொழில் கிடைக்காதவிடத்து உணவகங்களில் பணியாற்றும் நிலை காணப்படுகிறது. இவ்வாறானவர்கள் துறை சார்ந்த அறிவைப் பெற்றிருப்பதில்லை. இவ்வாறான நிலைமைகளால்தான் சுகாதார துறை உணவகங்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது.

உரிய அறிவினைப் பெற்று தொழிலில் ஈடுபட்டால் இவ்வாறான சிரமங்களை தவிர்க்க முடியும்.

உணவு மூலமாக பரவும் நோய் நிலைமைகளில் இருந்து தற்போது முன்னேறி இருக்கிறோம். முன்னைய காலங்களில் செங்கமாரி என்ற பொதுவான நோய் இருந்தது. ஆனால் தற்போது அந்த நோயைக் காண முடிவதில்லை. அதேபோல் குடல் புழுக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளும் முன்னைய காலங்களில் சுகாதார தரப்பிற்கு சவால்களை கொடுத்தன. இன்று அந்த நோய்களும் இல்லாமல் போயுள்ளன.

இவ்வாறான முன்னேற்றம் காணப்பட்டாலும் விழிப்புணர்வு மிக அவசியம். உணவகங்களில் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதன் ஊடாக எமது சுற்றுலாத்துறையை அதிகரிக்க முடியும்.

உணவில் இரசாயன சேர்க்கை தொடர்பாக மக்கள் பெரிதாக அறிந்திருப்பதில்லை. இன்று அதிகமானவர்களுக்கு நீரிழிவு, புற்றுநோய் போன்றன காணப்படுகின்றன.

மரக்கறிகளுக்கு அதிக மருந்து தெளித்தல், மருந்து தெளித்தவுடன் சந்தைப்படுத்தல், சில இலாபங்களுக்காக போமலின் போன்ற பதார்த்தங்களை சேர்த்தல் போன்ற செயற்பாடுகள் தான் இவ்வாறான நோய் நிலைமைகளுக்குக் காரணமாக இருக்கலாம் எனக் கருதுகிறோம்.

உணவுப் பாதுகாப்பினை மேம்படுத்தும் முகமாக அவற்றுக்கான தொழில் அனுமதியை வழங்கும் போது, மருத்துவச் சான்றிதழ் வழங்கும் போதும் துறை சார்ந்த அறிவு பெற்றவர்களுக்கே மருத்துவச் சான்றிதழ் வழங்கப்படும்.

அறிவு வளர்ச்சி ஊடாக சுகாதார தரப்பினரால் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளை தவிர்க்க முடியும். - என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# இன்றைய ராசி பலன்கள் - 10.09.2023




இன்று பொறுப்புகள் அதிகமாக காணப்படும். ஆன்மீகத்தில் ஈடுபடுவீர்கள். அதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணியிடத்தில் சில சவாலான சூழ்நிலைகள் காணப்படும். பணிகள் மும்மரமாக இருக்கும். என்றாலும் உங்கள் திறமை மூலம் நீங்கள் விரைந்து பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடனான உங்கள் அணுகுமுறை நேர்மையாக இருக்கும். இந்த நேர்மை உங்கள் இருவருக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் நிறைந்து காணப்படும். இன்று ஆக்கப்பூர்வமான காரியங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களைச் சுற்றி காணப்படும் நம்பிக்கை தரும் நேர்மறை ஆற்றல் காரணமாக இன்று திடமான ஆரோக்கியம் காணப்படும்.




இன்றைய தினத்தை அமைதியான தினமாக ஆக்க நீங்கள் நம்பிக்கை, தைரியம் மற்றும் உறுதியுடன் இருக்க வேண்டும். பதட்டத்தை விடுத்து மகிழ்ச்சியாக இருங்கள்.

பணிகள் கடினமாக இருப்பதாக உணர்வீர்கள். எளிதாக பணியாற்ற திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசி உங்கள் நாளை மகிழ்ச்சியானதாக ஆக்குவீர்கள். இதனால் வேறுபாடுகள் நீங்கி திருப்தி நிலவும்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தைக் கையாளும் போது விழிப்புடன் இருக்க வேண்டும்.

இன்று சளி மற்றும் இருமலால் பாதிக்கப்படுவீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை உருவாக்கும்.




இன்று நீங்கள் உண்மையாகவும் நேர்மையாகவும் இருக்க வேண்டும். உணரச்சிவசப்படுதலை தவிர்க்க வேண்டும். சிறப்பான பலன்கள் பெற உங்கள் செயல்களை திட்டமிட வேண்டும்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை சிறந்த வாய்ப்புகளை இழப்பீர்கள்.திறமையுடன் பணியாற்ற திட்டமிடுதல் அவசியம்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே விவாதங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு இருவரும் பேசுவதை தவிர்க்கவும். இன்று உங்கள் காதால் மனதை வெளிப்படுத்துவதற்கு உகந்த நாள் அல்ல.

உங்களிடம் பணம் சிறிதளவு காணப்படும். ஆனால் செலவுகள் அதிகமாக இருக்கும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று ஆற்றல் குறைந்து காணப்படும்.




இன்று நீங்கள் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். இன்று சில சௌகரியங்கள் குறைந்து காணப்படும். இன்று மனதுக்குத் திருப்தி கிடைப்பது கடினம்.

உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணியைக் குறித்து உங்கள் மேலதிகாரிகள் பெருமைப்படுவார்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். சுமுகமான பேச்சுவார்த்தைகல் ஆறுதலை தரும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் காணப்படும்.

முறையான உணவுப் பழக்கத்தின் மூலம் ஆரோக்கியமாக இருக்க இயலும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் ஆரோக்கியத்தை தக்க வைத்துக் கொள்ளலாம்.




இன்று வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வதன் மூலம் இன்றைய நாளை சிறந்ததாக்கிக் கொள்ளலாம்.

உங்கள் பணிக்கு கிடைத்த அங்கீகாரம் உங்களுக்கு திருப்தி அளிக்கும். புதிதாக கொடுக்கப்பட்ட வேலை உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கும்.

உங்கள் காதலை உங்கள் துனையிடத்தில் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

இன்று நிதிநிலை சிறப்பாக காணப்படும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் ஆற்றல் உங்களை திடமாக வைத்திருக்க உதவும். உங்களிடம் நம்பிக்கையான எண்ணங்கள் காணப்படும்.




இன்று உங்களுக்கென்று இலட்சியத்தை அமைத்துக் கொண்டு அதனை அடைய முயற்சி செய்வீர்கள். உங்களிடம் தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும். உயர்ந்த இலட்சியத்தை அடைவீர்கள்.

நீங்கள் செய்யும் பணியில் உங்களுக்கு திருப்தி காணப்படாது. அதிகப் பணிகள் காணப்படும். அவை இயந்திரத்தனமாக இருப்பதாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிபடுத்துவீர்கள். இது அவருக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் தேவைகளுக்கு செலவு செய்ய போதிய அளவு பணம் காணப்படும். எதிர்கால முதலீடு திட்டங்களை நீங்கள் மேற்கொள்ளலாம்.

நீங்கள் தொடை மற்றும் கால் வலியால் அவதிப்பட நேரலாம். முறையாக உடற்பயிற்சி செய்வதன் மூலம் நீங்கள் ஆரோக்கியமாக இருக்கலாம்.




இறை வழிபாட்டின் மூலம் உங்கள் மனதை கட்டுப்படுத்த முயலுங்கள். அது உங்களுக்கு ஆறுதலையும் திருப்தியையும் மகிழ்ச்சியையும் தரும்.

பணிகளை திறமையாக ஆற்றுவதில் ஸ்திரத்தன்மை இருக்காது. சக பணியாளர்கள் ஒத்துழைக்க மாட்டார்கள். மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையுடன் தேவையில்லாத வாக்கு வாதங்கள் ஏற்படலாம். உங்களை அமைதியாக வைத்திருங்கள்.

உங்களிடம் குறைந்த அளவு பணம் காணப்படும். பெரிய அளவில் பணத்தை முதலீடு செய்வதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. தோல் எரிச்சல்கள் காணப்படலாம்.




இந்த நாளில் எழும் எந்தவிதமான சஞ்சலத்திற்கும் இடம் கொடுக்காதீர்கள். அமைதியாக இருப்பது நல்லது.

பணியிடச் சூழல் அனுகூலமாக இருக்கும். பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் உற்சாகத்துடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் பிரியமானவரிடம் உங்கள் அன்பை வெளிப்படுத்த இயலாது. உங்கள் மனதில் சில குழப்பங்கள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.

நிதிநிலையில் பற்றாக்குறை காணப்படும். பணம் கரைவதைக் காண்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் திடமாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்

# இன்றைய ராசி பலன்கள் -10.09.2023

## தனுசு

உங்கள் உறுதியின் மூலம் சிறந்த பலன்களைக் காண்பீர்கள். வெற்றியின் மீதான உங்கள் நம்பிக்கை காரணமாக வெற்றி உங்கள் கதவைத் தட்டும்.

நீங்கள் பணிகளை எளிதாக ஆற்றி நற்பெயரைப் பெறுவீர்கள். உங்கள் சக பணியாளர்களுக்கு எடுத்துக்காட்டாக இருப்பீர்கள். அவர்கள் உங்கள் திறமைகளைப் பாராட்டுவார்கள்.

இன்று உங்கள் துணையிடம் நட்புறவு கொண்டிருப்பீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

இன்று உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

ஆரோக்கிய பிரச்சினைகள் ஏதும் காணப்படாது. இன்று அமைதியாக ஓய்வாக காணப்படுவீர்கள்.

## கும்பம்

இன்று மிகவும் பொறுமையுடன் இருக்க வேண்டும். நீங்கள் துடிப்புடன் இயங்க தேவையற்ற கவலைகளை விட்டொழிக்க வேண்டும்.

உங்கள் பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. தவறுகள் நேராமல் உங்களை நீங்கள் மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

இன்று நீங்கள் பதட்டத்திற்கு ஆளாவீர்கள். இது உங்கள் நடத்தையில் வெளிப்படும். இது உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். பணத்தை திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும்.

தொடை மற்றும் கால் வலியால் அவதிப்பட நேரலாம். தியானப் பயிற்சி மேற்கொள்வது நல்லது.

## மகரம்

இன்று சிறப்பான நாளாக இருக்காது. என்றாலும் இறைவழிபாட்டின் மூலம் இன்றைய நாளை நீங்கள் சமாளிக்கலாம். உங்கள் குடும்பத்துடன் அனுசரித்து நடந்து கொள்ளுங்கள்.

நீங்கள் பணிகளில் தவறுகள் செய்வீர்கள். அதனை உங்கள் மேலதிகாரிகள் கவனிப்பார்கள். அந்த வேலையை திரும்ப செய்யக் கூறுவார்கள்.

உங்களின் மாறுபடும் மனநிலை உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். ஆரோக்கியமான உறவிற்கு நீங்கள் இன்று சகஜமாக இருக்க வேண்டியது அவசியம்.

கடன்கள் மூலம் பணம் பெறுவீர்கள். அதனைக் கொண்டு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

பதட்டம் மற்றும் பாதுகாப்பற்ற உணர்வுகளை தவிர்க்க வேண்டும். எதையும் இலேசாக எடுத்துக் கொண்டால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.

## மீனம்

நீங்கள் இன்று வெளியிடங்களுக்கு சென்று வரலாம். உங்கள் செயல்களில் உணர்ச்சிவசப்படாமல் யதார்த்தமாக இருங்கள். அமைதியாக இருங்கள்.

இன்று பணிகள் அதிகரித்துக் கொண்டே இருப்பதாக உணர்வீர்கள். எனவே திட்டமிட்டு பணியாற்றுவது நல்லது. பணிகளில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் எச்சரிக்கையுடன் பணியாற்ற வேண்டும்.

உங்களின் ஈகோ உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். இம்மாதிரி உணர்வுகளை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

தேவையற்ற செலவினங்கள் ஏற்படலாம். செலவுகளை கட்டுப்படுத்துவது நல்லது. உங்கள் நிதிநிலைமையை சிறப்பானதாக ஆக்க பயனுள்ள யுக்திகளைக் கையாள வேண்டும்.

